# DEPOSITION OF WITNESS
## In the Court of Judicial Magistrate No.I, Mettur
## Case No : ST.C. No.599/2020

Prosecution witness : **அ.சா.1** **Date : 17.10.2023**

| | |
|---|---|
| **Name :** மதுவந்தி | Caste : BC |
| **Father's Name : ராஜேந்திரன்** | Calling : HDB-790 |
| Village : இந்திராகாந்தி காலனி | Religion : Hindu |
| Taluk : மேட்டூர் | Age : 29 |

( Accused absent. Filed 317 and allowed. )

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் மேட்டூர் இந்திரா காந்தி காலனியில் குடியிருக்கிறேன். நான் HDP வங்கியில் பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரி என் கணவர். எனக்கு 2015 வருடம் எதிரியுடன் திருமணம் நடைபெற்றது. ஒரு ஆண் குழந்தை உள்ளது. பின்னிட்டு நாங்கள் இருவரும் 2016 வருடத்திலிருநது பிரிந்து என்னுடைய அப்பாவின் வீட்டில் குடியிருந்து வருகிறேன். 13.09.2020 ஆம தேதி இரவு 8.30 மணியளவில் நான் எனது அப்பாவின் வீட்டில் இருந்தபோது என் கணவர் என் அப்பா வீட்டிற்கு வந்தார். வங்நதவுடன் என்னை கெட்ட வார்த்தையால் திட்டி என்னை கையால் தலையிலும் முதுகிலும் அடித்து கழுத்தில் நகத்தால் கீறினார். பின்பு தலைமுடியை பிடித்து இழுத்தார். நான் சத்தம்போட்டவுடன் என் அப்பாவும் அம்மாவும் சண்டையை விலக்கி விட்டார்கள். அவர்களையும் கீழே தள்ளி கையால் அடித்தார். அதன்பின்பு நான் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் சேர்ந்தேன் அங்கு வந்த போலிசார் என்னிடம் விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றனர். அதிலுள்ள கையெழுத்து பெற்றனர். வாககுமூலத்திலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். போலிசார் என்னை விசாரித்தனர். **( புகார் அ.த.சா.ஆ.1 ஆகும். )**

**<u>குறுக்கு விசாரணை</u> –** வழக்கறிஞர் ஆஜரலிருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**ஒம்/–அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**

DEPOSITION OF WITNESS
In the Court of Judicial Magistrate No.I, Mettur
Case No : ST.C. No.599/2020

Prosecution witness : அ.சா.2 Date : 17.10.2023

| | |
|---|---|
| **Name :** சந்திரா | Caste : BC |
| **Father's Name : ராஜேந்திரன்** | Calling : House Wife |
| Village : இந்திராகாந்திகாலனி | Religion : Hindu |
| Taluk : மேட்டூர் | Age : 50 |

( Accused absent. Filed 317 and allowed. )

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் மேட்டூர் ஸ்டேட் பேங்க் பின்புறம் குடியிருக்கிறேன். நான் வீட்டில் தான் உள்ளேன். அ.சா. 1 என் மகள். என்னுடைய மகளுக்கும் அவரது கணவருக்கும் பிரச்சினை ஏற்பட்டு கடந்த 5 வருடங்களாக என்னுடைய மகள் அ.சா.1 எங்களுடன் தான் குடியிருந்து வருகிறார். எனது மகள் வேலை செய்த போன் கடைக்கு போன் செய்து கெட்ட வார்த்தையால் திட்டி வந்ததாக என் மகள் என்னிடம் சொன்னார். சுமார்2 வருடங்களுக்கு முன்பு இரவு 08.30 மணியளவில் நான் வீட்டிலிருந்தபோதஅங்கு வந்த எதிரி அ.சா.1 ஐ கெட்ட வார்த்தையால் திட்டி அவரை கழுத்தில் நகத்தால் கீறியும், தலைமுடியை பிடித்து இழுத்தும அடித்தார். தடுக்க வந்த என்னையும் என் கணவரையும் கையை பிடித்து தள்ளி வைத்துக் கொண்டு அடித்தார். சத்தம் கேட்டு உறவினர்கள் வந்ததால் வெளியே சென்று விட்டார். காயம்பட்ட என் மகளை மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் என் மகளுக்கு கழுத்தில் காயம் இருந்தது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை** – வழக்கறிஞர் ஆஜரலிருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**ஒம்/–அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**